

பதிவுகளில் அன்று : நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) கவிதைகள்

Written by - பதிவுகளில் அன்று: நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) -
Friday, 01 November 2019 08:38 - Last Updated Friday, 01 November 2019 08:49

- பதிவுகளின் ஆரம்ப கால இதழ்களில் வெளிவந்த ஆக்கங்கள் ஒரு பதிவுக்காக இங்கு அவ்வப்போது ஒருங்குறி எழுத்துருவில் மீள்பிரசுரம் செய்யப்படும். -- ஆசிரியர் --

- பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான் உலக இலக்கியம், இலக்கிய கோட்பாடுகள், அறிவியற் கோட்பாடுகள், கலை, இலக்கிய ஆளுமைகள் என ஆழ்ந்த சிந்தனையின் வெளிப்பாடான கட்டுரைகளை மற்றும் கவிதைகளை எழுதிவருபவர். நட்சத்திரவாசி என்னும் புனைபெயரில் இவர் அன்று பதிவுகள் இணைய இதழில் எழுதிய கவிதைகளிவை. இவரது வலைப்பதிவு: நட்சத்ரவாசியின் தளம் (https://natchathravasi.wordpress.com /). -

---

பதிவுகள் டிசம்பர் *2010* இதழ் *132*

கடைசி வேட்டை-

ஆறு கடல்களுக்கு அப்பால் தனியொரு தீவில் தனித்தலைகிறேன்
பளிங்கு மண்டபத்தில் என் உயிர் கிளியாய் சிறை வைக்கப்பட்டிருக்கிறது
யாரவனோ இப்படியொரு விதி செய்து மாயத்தை புரட்டுகிறான்
மெல்ல தென்றல் வீசுகையில் நான் நினைவுகளில் என்னை காண்கிறேன்
எனது தேசத்தில் எனக்கிருந்த வீடும்,ஊரும் இல்லாமல் போயிற்று
என்னை ஆண்ட காதலியவளின் முகமும் கூட
ஒரு மின்னல் வெட்டென வந்து போகிறது அவ்வப்போது நினைவுகள்
எனது குழந்தைகளிடன் நான் கொண்ட பாசம் கண்ணீராய்
வானத்தில் ஊர்ந்து போகிறது வெண்ணிற மேகக் கூட்டமாய்
அது எங்கோ மழையாய் பெய்யக் கூடும் என் சோகம் சொல்லி
எனினும் வறண்ட பாலையில் தூசிக்காற்றாய் சுழலும்
உயிரின் பொடிதுகள்கள் உயிராக வேண்டி தியானிக்கின்றன
அவனோ ஏழு வானங்களுக்கு மேலே இருக்கையில் அமர்ந்து ஓய்வெடுக்கிறான்
அவனுக்கு தெரியாததல்ல தனிமையும்,உவர்ப்பும்

1 / 7

பதிவுகளில் அன்று : நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) கவிதைகள்

Written by - பதிவுகளில் அன்று: நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) -
Friday, 01 November 2019 08:38 - Last Updated Friday, 01 November 2019 08:49

மந்திரத்தால் அவனை வசியம் செய்து எனதுயிரை என்னிடம்
சேர்க்கும் வல்லமையுடையவன் யாரோ எப்போது வர கூடுமோ
எனினும் நான் காத்திருக்கிறேன்
எனது ஊரின் ரம்மியமான பொழுதுகளை குடித்து
காதல் போதையை கிரகித்து ஊன் அழிய சிதிலமாய்
போகுமிந்த உயிர் கூட்டில் கடைசி வேட்டை எப்போதோ சொல்லிவிடு
அதற்கு முன்னால் எனக்கொரு சேதியனுப்பவேண்டும்.

2.

பதிவுகள் டிசம்பர் *2009* இதழ் *120*
அரவிந்தம் நனைத்த பொழுதுகள்

என் பால்ய நதியின் நீரருவி
பாய்ந்து வழிகிறது
ஒவ்வொரு பொழுதிலும் புன்னகை பூத்து
நண்பனாய் வந்து முதலில்
சேர்ந்து கொண்டவன் நீ
எனது பிஞ்சு கைகளைப் பிடித்து
முத்தம் தந்த சூடு இன்னும்
தகித்து முடியவில்லை
இலக்கணங்களை புரட்டி
எழுது கோலெடுத்து மை எழுதினாய்
எனது கண்களில்
ஒரு நிரந்தரச் சித்திரம் போல
இடையில் சிறு பொழுதொன்றில்
அழுது கொண்டே அஜீத்தும்
நம்மிடையே நின்று கொண்டு
முகங்களை பார்க்கிறான்
அப்போது தான் அந்த தோணி
உருவானது
நம் மூவரையும் சுமந்து கொண்டு
சீறிப் பாய்ந்து முன்னே செல்கிறது
காற்றில் கலந்து வரும் வாசனையில்
அரவிந்தம் எப்போதும் நினைத்துக்
கொள்ளும் பொருட்டு
எங்கோ ஒரு மூலையில்
இடவலம், அற்று.

2 / 7

பதிவுகளில் அன்று : நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) கவிதைகள்

Written by - பதிவுகளில் அன்று: நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) -
Friday, 01 November 2019 08:38 - Last Updated Friday, 01 November 2019 08:49

3.

பதிவுகள் டிசம்பர் *2009* இதழ் *120*
நீ இல்லாத அறை புழுக்கமாயிருக்கிறது

ஒரு பழைய நினைவை இழுத்து வந்தது

ஒரு பழைய நினைவை இழுத்து வந்தது
மெல்லிய காற்று வெறும் பொழுதொன்றில் இதமாய்
அதனொரு சுழலில் அறை பற்றிய
சித்திரம் காட்சிப்படுத்தப்பட்டது
அறை வாசலின் திரைச்சீலை
காற்றில் படபடக்கிறது
அதன் சுழல் திசைவழியில்
அதனைப் பற்றிப் பிடித்தவாறு
நின்றிருந்த அவள் சிரிப்பொலி தோய்ந்த முகம்
மெல்ல மறைந்து ஒலிநாதமாகிறது
படுக்கையில் கிடந்தவாறு ஏதேதோ
பேசிய பேச்சுக்கள் வரிகளாக மிதக்கின்றன
மெல்ல இருமை கவிந்து வெளிச்சம்
மேலெழும்புகையில் ஓடிச்சென்றொளியும்
அவளின் கரம் பற்றி அறைக் கதவோடு
சாய்த்து நிறுத்தி கொடுத்த இதழ் முத்தம்
நினைவுக்கு வெளியிலும் வெடிக்க
உதட்டை துடைத்து நாணமுடிகிறது
மெல்ல உயரும் அவள்
முகத்தில் பயம் கலந்துவிட
கரம் விட்டு ஓட எத்தனித்து
போக முடியாமல் அதிர்ந்தெழுந்து
அக்னியில் சமைந்தோம்
அறை இப்போது புழுக்கமாயிருக்கிறது.

தீக்குஞ்சுகள்

3 / 7

பதிவுகளில் அன்று : நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) கவிதைகள்

Written by - பதிவுகளில் அன்று: நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) -
Friday, 01 November 2019 08:38 - Last Updated Friday, 01 November 2019 08:49

எரியும் தீயினை பாருங்கள்

எரியும் தீயினை பாருங்கள்
ஒரு சிறிய முனையின்
சொல்லொன்று பற்றியதோ
அக்கினியை சமைக்க
எந்தவொரு வல்லமை வந்ததோ
அதன் எரிதலிலும் படர்தலிலும்
வெவ்வேறு நிறமிருக்க
என்ன காரணமோ
எரிந்து கொண்டிருக்கும் ஒரு பொறி
உயர்ந்து மேலெழுந்து
பறந்து உயர்தலிலும்
என்ன ஒரு வேகம்
பொடிந்து விழும்
சிறு தீக்குஞ்சுகள்
கண்முன்னே மரிக்க
பதறாதோ மனம்
அவை படபடத்து படபடத்து
குஞ்சுகளை பொரிக்கின்றன
எந்த ஒரு இயலாமையும்
காட்டிக்கொள்ளாமலே
சிறு சொல்லெடுத்து நானும்
அக்கினி சமைக்க
வென்று விட்டதோ உலகை
அதனொரு தழல்.

4.

வெறுமொரு சலனம்

எனது ஆண்மையின் சூரியன்
உதிக்க துவங்கியது வழக்கமற்ற பொழுதில்
காலம் கலைத்து போட்ட நினைவுகளில்
அதன் வேர்கள் சொற்களாகின்றன
பட்டம் பூச்சியின் சிறகு அதிர்வது போல
அதன் விரைப்பு தொடங்குகிறது
நீ இல்லாத கணங்களை நினைத்தபடி
நிறைவேறாத காமத்தை சுமந்தபடி
நீ விட்டு சென்ற வலியின் துயரம்
என்னை மூழ்கடித்துக் கொண்டிருக்கிறது
மெல்ல உயர்ந்து திரண்ட மேகமாகி

4 / 7

பதிவுகளில் அன்று : நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) கவிதைகள்

Written by - பதிவுகளில் அன்று: நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) -
Friday, 01 November 2019 08:38 - Last Updated Friday, 01 November 2019 08:49

கனிய துவங்கி கொள்ள
காத்திருக்கிறது என் காலம் அதன் நேர்கோட்டில்
பிடித்து செல்லப்படாத கன்றின் குதித்தல்
எதைப்பற்றியதாகவும் இல்லை எனும்படி
நீ எப்போது என்னுடன் இருப்பாய்
என்பது தெரியாதாகையால்
நான் சுமக்கும் உனது கனவுகள்
எளிதில் இறக்கிவிட முடியாததாய் இருக்கிறது.
பாழ்வெளியில் வீசும் காற்றின் நினைவுகளில்
உனது முகங்காண துடிக்கும் என் ஆவலில்
வெப்பகிரணமான ஆயிரம் வர்ணங்கள்
என் துயரினும் பெரிதான இப்படியான
பொழுதுகளை கட்டப்பது குறித்து
இப்போதே சொல்லிடு
இல்லையென்றால் எனக்கு நானே தண்டனை
அளித்துக் கொண்டு குருதியில் நனையும்
காமத்தை காலால் எட்டி மிதித்து
எறிய வேண்டிவரும்
வலி முற்றி போகுமுன்னரே
சிறு வண்டி பூட்டி தயாராக வைத்திரு
வெப்பம் மெல்ல இறங்கியதும்
இரத்தமணம் கேட்டு வரும் மிருகங்களை
காணாதிருந்திட வேண்டும்
அறுந்து கிடக்கும் என் குறிவளர்ந்து
பெரிதாவதற்க்குள் நான் போய்விடவேண்டும்
பரவும் குருதியில் சூரிய அஸ்தமானம்
வெறுமொரு சலனம் மாத்திரமே.

5.
பதிவுகள் செப்டம்பர் *2009* இதழ் *117*
என்றாலும் கவிதையே

பதினைந்து வருடமாக
நானும் பார்த்துகொண்டிருக்கிறேன்
அந்த இற்றுப் போன கிளையை
ஓடிந்து விழவும் இல்லை
முறித்து எடுக்கவும் இல்லை
பலசமயமும் மனைவி
விறகு எரிக்க இல்லை
என்ற போதும்
அந்த மரத்துக்கு
இற்று போன கிளை

5 / 7

பதிவுகளில் அன்று : நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) கவிதைகள்

Written by - பதிவுகளில் அன்று: நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) -
Friday, 01 November 2019 08:38 - Last Updated Friday, 01 November 2019 08:49

என்னவோ கொள்ளை
அழகு தான்.

மழை காலங்களில்
எறும்புகள்
தானியங்களை
இங்கிருந்து அங்கும்
அங்கிருந்து வேறெங்கும்
கொண்டு செல்வதை தவிர்த்து
வேறு வேலை ஏதேனும் வேலை உண்டோ?

பூக்களின் வாசத்தை கண்டும்
காணாமலும் போய்க்
கொண்டிருக்கிறது
ஓரு வண்டு
என்னை சமன்குலைய
செய்யும்
உத்தேசத்துடன்

மௌனமாய் உதிர்ந்து
விழுந்து கொண்டிருக்கிறது
ஓர் ஆலிலை
கார்டூன் நெட்வொர்க்கில்
டோமுக்கு பயந்து
ஓடும் ஜெர்ரிக்கு
அது பயன்படக் கூடும்
என்பதை தவிர்த்து
வேறென்ன யோசிக்க முடிகிறது
இப்போது?

ஆடு கரையும் போது
ஏன் கரைகிறது என்று
நினைக்காமலில்லை
என்றாலும்
கரைந்து விட்டு தான்
போகட்டுமே என்பதான
மனசை போலொரு
மனசா உனக்கு?

இரவில் எழுப்பச் சொல்லி
ஓரு நட்சத்திரம்
உறங்கி போனது
நட்சத்திரங்களை பற்றி
யாரும் கவலை
கொள்வதில்லை என்ற போதும்
நடத்திரம் என்றோ

6 / 7

பதிவுகளில் அன்று : நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) கவிதைகள்

Written by - பதிவுகளில் அன்று: நட்சத்திரவாசி (பேராசிரியர் எச்.முஜீப் ரஹ்மான்) -
Friday, 01 November 2019 08:38 - Last Updated Friday, 01 November 2019 08:49

விண்மீன் என்றோ
எப்படி வேண்டுமானாலும்
அழையுங்கள்
ஆனால்
பகற்பொழுதில் காட்டச்சொல்லி
தொந்தரவு தராதீர்

7 / 7